


வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழக செயலாளரும் மாநகராட்சி துணை மேயருமான எம்.சுனில்குமார் தலைமையில் நடந்தது. இதில் கழக பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அருகில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் தங்கமணி, மாநகரஅவைத் தலைவர் சூரி என்ற கோவிந்தன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் முரளி பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருச்சி கழக அலுவலகத்தில்

# “கலைஞர் என்றொரு காவியம்” நூல்!

## அமைச்சர் கே.என்.நேரு வெளியிட்டார்!

திருச்சி, செப். 14-

திருச்சி தில்லைநகரில் உள்ள கழக முதன்மைச் செயலாளர் அலுவலகத்தில் கலைஞர் என்றொரு காவியம் நூல் வெளியீட்டு விழா பதிப்பகத்தின் உரிமையாளர் செந்தலை நெப்போலியன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே. என். நேரு அவர்கள் கலைஞர் என்றொரு காவியம் நூலை வெளியிட திரைப்பட இயக்குனர் எஸ்.ஏ. விஜயகுமார் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளரும், மாநகர மேயருமான அன்பழகன், இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் கலந்து கொண்டனர்.

பின்னர் நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

கலைஞரின் புகழ் மக்களிடம் சென்று சேர இந்த நூல் நிச்சயம் வழிகாட்டும்.

அதற்கு காரணம் கலைஞர் அனைவருக்குமான ஒரு பல்கலைகழகமாக இருப்பவர். அவர் எப்படி சுயம்புவாக இருந்து திராவிட முன்னேற்ற கழகம் உயிர்த்தெழச் செய்தாரோ, அதேபோல் கொண்ட கொள்கையில் இறுதி மூச்சுவரை நிலைத்து நின்றவர் கலைஞர். தமிழ்ச் சமுதாயத்தினருக்கு தமிழினத் தலைவர் கலைஞர் தான், அவரைப்பற்றி அநேக நூல்கள் வெளிவந்துள்ளது.

கலைஞரின் கடிதங்களே 5 பாகங்களாக வெளிவந்துள்ளது. மேலும் அவருடைய புகழை பரப்பவும், அவருடைய செயல்களை இளைஞர்கள் கற்றுக் கொள்ளவும் நிச்சயம் இந்த நூல்கள் உதவும். லட்சக்கணக்கில் சம்பளம் வாங்குபவர்கள் சமுதாயத்தில் அக்கறை உள்ளவர்களாக இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.




மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சீத்தாராம் யெச்சூரி மறைவெய்தியதையொட்டி, சென்னை, தியாகராயர் நகர், வைத்தியராம் தெருவில் உள்ள சி.பி.எம். தமிழ் மாநிலக்குழு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த மறைந்த சீத்தாராம் யெச்சூரி அவர்களின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் எம்.பி., மலர்தூவி மரியாதை செலுத்தினர். அதுபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலக்குழுச் செயலாளர் தோழர் கே. பாலகிருஷ்ணன், மாநில செயற்குழு உறுப்பினர் ஜி. ராமகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.



மூத்த கம்யூனிஸ்ட் தலைவரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச்செயலாளருமான தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் மறைவெய்தியதையொட்டி, புதுடெல்லியில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான ஏ.கே.கோபாலன் பவனில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சீதாராம் யெச்சூரி அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழகத்தின் சார்பில் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. மலரஞ்சலி செலுத்தி வணங்கினார்.

### மார்க்சிஸ்ட் தமிழ் மாநிலக்குழு அலுவலகத்தில்

# சீத்தாராம் யெச்சூரி திருவுருவப் படம்!

## தி.மு.க. சார்பில் ஆர்.எஸ்.பாரதி - டி.கே.எஸ்.இளங்கோவன் அஞ்சலி!

சென்னை, செப். 14-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்களின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் எம்.பி., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சீத்தாராம் யெச்சூரி மறைவெய்தியதையொட்டி, சென்னை, தியாகராயர் நகர், வைத்தியராம் தெருவில் உள்ள சி.பி.எம். தமிழ் மாநிலக்குழு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த மறைந்த சீத்தாராம் யெச்சூரி அவர்களின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் எம்.பி., ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

அதுபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலக்குழுச் செயலாளர் தோழர் கே. பாலகிருஷ்ணன், மாநில செயற்குழு உறுப்பினர் ஜி. ராமகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

